தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 16-3-2016
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கடமையைச் சரியாக செய்தால்தான் உரிமையைக் கோர முடியும் - உலக நுகர்வோர் உரிமை தின உரையில் துணைவேந்தர் பேச்சு

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கோவை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு கழகம் இணைந்து நடத்தும் உலக நுகர்வோர் உரிமை தினம் நேற்று (15-3-2016) பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெற்றது.

இரத்தினம் கல்லூரி குழுமத் தலைவர், திரு. ராமதாஸ் அவர்கள் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த தனது அறிமுக உரையில் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, தகவல் உரிமை, சட்ட உரிமை ஆகியவை உள்ளது. நுகர்வோர் கழகம் மிகவும் முக்கியமானது. கோவையில் திரு. சேது அன்வர் ஹுசைன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் தன் தலைமையுரையில் 1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களால் செயல்படுத்தப்பட்டது. மக்களின் மன உளைச்சலை போக்கவும், பாதுகாப்பான பொருட்கள் மற்றும் சேவைகள் பெற உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. தரமான உணவுப் பொருட்கள், முக்கியமாக துரித உணவுகளில் நிறைய கவனமாக இருக்க வேண்டும் என்றார். கல்லூரி படைப்பை தாய்மை அடைந்ததால் தொடர முடியாத பெண்மணிக்கு அவர்கள் கல்லூரிக்கு செலுத்திய தொகை திரும்பப் பெறப்பட்டது. கல்லூரிக்கு சப்பாத்தி தயாரிக்கும் இயந்திரம் தரக்குறைவாக வழங்கப்பட்டதில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மூலம் மன உளைச்சலுக்கும் சேர்த்து, வாங்கிய விலையை விட இரண்டு லட்ச ரூபாய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டது. இதே போல் தரமற்ற மருந்துகள், மருத்துவமனை சேவைகள் ஆகியவற்றுக்கு நுகர்வோர் கழகம்

பாடுபடுகிறது. நுகர்வோர் விழிப்புணர்வு அவசியம். பேரம் பேசவும், தரமான பொருள் பெறவும், ரசீது பெறவும், பொருளின் தரமறியவும் உரிமை உண்டு என்று விளக்கினார்.

பேரூர் ஆதீனம் இளையபட்டம் முனைவர். தவத்திரு மருதாச்சலம் அடிகளார் அவர்கள் தனது உரையில், கோவை மாவட்ட நுகர்வோர் கழகமானது பெயரளவில் இல்லாமல் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது என்றார். காலத்திற்கேற்றாற் போல பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. சந்தையில் பொருளாதார அடிப்படையில் பொருட்கள் விற்கப்படுகிறது. எனவே, நுகர்வோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார். அனைத்து சட்டங்களும் நாம் உணர வேண்டும். முன்பெல்லாம் பெரியவர்கள் மட்டுமே நுகர்வோராக இருந்தனர். ஆனால், இப்பொழுது தொடக்கப்பள்ளி மாணவர்கள் கூட நுகர்வோராக விளங்குகின்றனர். எனவே அனைவரும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

கோவை மாவட்ட நுகர்வோர் கழக பொதுச்செயலாளர் மருத்துவர் திரு. எஸ்.எஸ். செந்தில்நாதன் அவர்கள் தனது தொடக்கவுரையில் அனைவரும் விளம்பரங்களுக்கு விலைபோகாமல் நல்ல பொருட்களை வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (முதுகலை பட்டப்படிப்பு) முனைவர். ச. மோகன் அவர்கள் நுகர்வோர் மற்றும் விற்பனையாளர் உறவு குறித்து பேசினார். விற்பனையாளர்களுக்கு பொறுமை, உண்மை, தரம், இடம் பார்த்து விற்பனை செய்தல் வேண்டும். தன் கண்டுபிடிப்புகளை நுகர்வோர் பலருக்கு எடுத்துச் சென்றதை அனுபவபூர்வமாக விளக்கினார். நுகர்வோர் பாதுகாப்பு, பொருள் பற்றிய அறிவு அவசியமாக பெற்றிருக்க வேண்டும். வேளாண் உற்பத்தியாளர்களுக்கு மிகவும் முக்கியம் தரமான பொருள் உற்பத்தியே என்றார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மற்றும் கோவை மண்டல கடவுச்சீட்டு அலுவலர் திரு. சசிக்குமார் அவர்கள் தனது உரையில் அனைத்து உரிமைகளும் அமெரிக்காவிலிருந்து தான் உருவாகிறது என்றார். உலக நுகர்வோர் தினம் 1983 முதல் அனுசரிக்கப்படுகிறது என்றார். தரமற்ற பொருட்கள் நிறைய உற்பத்தி செய்யப்படுவதால் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது. உரிமைகளோடு பொறுப்பும் அவசியம். வேளாண் கல்லூரியில் தரமான விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க சுவைஞர்கள், நுகர்வோர் மற்றும் உபயோகிப்பாளர்கள்

வேண்டும் என்றார். கடவுச்சீட்டு குறித்த விழிப்புணர்வு குறித்த நேரத்தில் கிடைக்கவில்லை என்று நுகர்வோர் நீதிமன்றத்துக்கு செல்ல முடியாது. ஆனால் குறைபாடுடைய கடவுச்சீட்டு கிடைத்தால் நீதிமன்றத்தை நாடலாம் என்றார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் தன் விழா நிறைவுப் பேருரையில் உற்பத்தியாளர்களாக விளங்கும் உழவர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். கடமை இல்லாமல் உரிமை இல்லை. 52 சதவிகிதம் உழைப்பாளர்கள் உள்ள சமூகத்தில் உழவர்களுக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். அப்போது தான் உரிமையைக் கேட்க முடியும் என்றார். நல்ல கல்வியை மாணவர்கள் பெற வேண்டும் என்றார்.

பொறியாளர் திரு. சாமிநாதன் அவர்கள் எல். ஈ. டி. விளக்குகள் குறித்த விழிப்புணர்வு உரை நிகழ்த்தினார். நீண்ட ஆயுள், குறைந்த மின்சார பயன்பாடு, குறைந்த வெப்பமயமாதல், விலை, மிகுந்த ஒளி கொடுக்கும் பாதரசம் போன்ற வேதியியல் பொருட்கள் இல்லாததால் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்றார். மற்ற விளக்குகளை விட 6 மடங்கு அதிக ஆயுட்காலம் கொண்டது என்றார். மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் பயன்படுகின்றன என்றார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை பேராசிரியர் முனைவர். கிருஷ்ணன் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர். 600க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை), முனைவர். ச. மகிமைராஜா வரவேற்புரை வழங்கினார். இறுதியாக கோவை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு கழக தலைமைச் செயலாளர் திரு. பெரியசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்